**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் .**

**OS. NO .132/2015**

**2020ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW2ன் வாக்குமூலம், ( 1969ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி ) திரு. எஸ். எழிலரசன், மொழி பெயர்ப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : **DW2 பாலசந்தர்** | **வயது** | : |
| **த.பெ./க.பெ.** | : **கோபாலாச்சாரி** | **தொழில்** | : |
| **ஊர்** | : | **சமயம்** | : |
| **வட்டம்** | : | **ஜாதி** | : |
| **மாவட்டம்** | : | | |

**முதல் விசாரணை : -**

எனது சம்மந்தி ராதாகிருஷ்ணன் 02.05.2010ல் எழுதி வைத்த உயிலில் நான் சாட்சி கையெழுத்து போட்டது பற்றி கூறுவதற்காக நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். 02.05.2010ல் மதியம் ராதாகிருஷ்ணன் போன் செய்து என்னுடன் பேச வேண்டி உள்ளது என கூறி என்னை வரச்சொன்னார். நான் மாலை 06.00மணியளவில் மானம்புசாவடி கிருஷ்ணன்கோவில் 3வது தெருவில் உள்ள அவர் வீட்டிற்கு சென்றேன். அவரும் ஒரு வழக்கறிஞரும் உட்கார்ந்திருந்தார்கள். நான் சென்ற பிறகு என்னிடம் ராதாகிருஷ்ணன் அவர் உயில் எழுத போவதாகவும், அதற்கு நான் சாட்சி கையெழுத்திட வேண்டும் எனவும் சொன்னார். என் முன்பாக ராதாகிருஷ்ணன் போன்செய்து பத்மநாபன் என்பவரை வரச்சொன்னார். அவர் பக்கத்தில் நான்கு வீடு தள்ளி இருந்ததால் கூப்பிட்ட உடனே வந்துவிட்டார். அவரிடமும் ராதாகிருஷ்ணன் தான் உயில் எழுதுவதாகவும், அதில் சாட்சியாக இருந்து கையெழுத்திட வேண்டும் எனவும் கூறி வழக்கறிஞரை உயிலை படித்து காண்பிப்பார் என்று சொன்னார். வழக்கறிஞர் அதன்படி உயிலை படித்து காண்பித்தார். மானம்புசாவடி 3வது தெருவில் உள்ள வீடு அவர் மனைவிக்கு எனவும், ஆட்டுக்கார தெருவில் உள்ள வீடு அவருடைய மகன் விஷ்வநாதனுக்கும் என எழுதியிருந்தது. வழக்கறிஞர், பத்மநாபன் மற்றும் என் முன்னிலையில் ராதாகிருஷ்ணன் அந்த உயில் சரியாக உள்ளது என்று கூறி கையொப்பமிட்டார் (கையெழுத்து). அதன்பிறகு முதல் சாட்சியாக என்னை கையெழுத்து போடச்சொன்னார். அவர்கள் மூவர் முன்னிலையிலும் நான் கையொப்பமிட்டேன். அதன்பிறகு பத்மநாபனை அடுத்த சாட்சி கையெழுத்து போடச்சொன்னார். எங்கள் மூவர் முன்னிலையிலும் பத்மநாபன் சாட்சி கையொப்பம் போட்டார்.

அதன்பிறகு வழக்கறிஞர் எழுதியதிற்காக கையொப்பமிட்டார். அதன்பிறகு எல்லாம் சென்றுவிட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில்(பி.சா.ஆ.12) ஒவ்வொரு பக்கத்திலும் கீழே உள்ள கையெழுத்துக்கள் ராதாகிருஷ்ணன் கையெழுத்தாகும். மூன்றாம் பக்கத்தில் இரண்டு கையெழுத்தும் மற்ற பக்கங்களில் ஒரு கையெழுத்தும் இட்டுள்ளார். நான்காம் பக்கத்தில் ராதாகிருஷ்ண்ன் கையெழுத்திற்கு பிறகு உள்ளது என்னுடையதாகும். எனக்கு அடுத்த உள்ள கையெழுத்து பத்மநாபன் கையெழுத்தாகும். அதற்கு கீழ் உள்ள கையெழுத்து வழக்கறிஞருடைய கையெழுத்தாகும்.

**<u>வாதிதரப்புகுறுக்கு விசாரணை :-</u>** வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைப்பு

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- கு. கருணாநிதி )
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ),
தஞ்சாவூர்.